இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்

# இயேசுவை தினம் பார்க்கிறேன்

VOL 23 ISSUE 11 NOVEMBER -2023
ஆண்டு சந்தா 100/- தனிப்பிரதி 10/-



# எழுப்புதல் காற்று

இயேசுவை தினம் பார்க்கிறேன் மாதப் பத்திரிகை இப்பொழுது Digital முறையில் நம்முடைய இணையதளத்திலும்
WWW.JESUSLIVES.IN



செம்பட்டியில்
ஆண்டு இறுதி
சிறப்பு உபவாச
ஜெபம்
வாருங்கள் இணைந்து ஜெபிப்போம்
நவம்பர்
6-11
திங்கள் முதல்
சனிக்கிழமை வரை
காலை 10 மணி
முதல் 2 மணி வரை
இடம் வானத்தின் வாசல், எழுப்புதல் ஜெப மையம்,
செம்பட்டி, திண்டுக்கல்




மதுரை மாவட்ட அனைத்து திருச்சபைகள் மற்றும்
இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் இணைந்து நடத்தும்
மதுரையில் எழுப்புதல்
உபவாச ஜெபம்
நவம்பர்
18
9:00am
to
2:00pm
சனிக்கிழமை
இடம்
இயேசு அழைக்கிறார் ஜெபகோபுரம், பைபாஸ் ரோடு,
பழங்காநத்தம், PRC Depot அருகில், மதுரை

# ஆசிரியர் மடல்

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த மாதஇதழ் வாயிலாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். **சங்கீதம் 46:9-ல் அவர் பூமியின் கடைமுனைமட்டும் யுத்தங்களை ஓயப்பண்ணுகிறார் என்று சொல்லப்பட்டுள்ளது.** ஆம் உலகத்தின் பல பகுதிகளிலும், உள்நாட்டுக்குள்ளும், குடும்பங்களுக்குள்ளும் யுத்தங்கள் நடந்து, மனிதர்கள் கொலை செய்யப்பட்டு, பயங்கரமான வேதனைகளை சந்திக்கிறார்கள். சமாதானக் கர்த்தர் சாத்தானைக் காலின் கீழ் மிதித்து, சாத்தானால் பயன்படுத்தப்படுகிற மனிதர்கள் விடுதலையாக ஜெபிக்க வேண்டும். கடந்த நாட்களில் இராமநாதபுரத்திலும், திருப்பூரிலும், கோவை அன்னூரிலும் நடந்த கூட்டங்கள் மிகுந்த ஆசீர்வாதமாக நடைபெற்றது. ஜனங்கள் மத்தியில் மிகுந்த எழுப்புதலைக் கொண்டு வந்தது. அதேபோல் செம்பட்டி வானத்தின் வாசலில் நடைபெறும் உபவாச ஜெபங்களும் மிகுந்த ஆசீர்வாதமாக நடைபெறுகிறது. கர்த்தருடைய சித்தத்தின்படி அவருடைய காரியத்தைச் செய்ய ஜெபித்துக் கொள்ளுங்கள். தொடர்ந்து சோஸியல் மீடியாவில் ஒளிபரப்பாகிற கர்த்தாவே என்னை கைதூக்கி விடும், இயேசுவை தினம் பார்ப்போம், நம்பிக்கையின் இரவு நிகழ்ச்சிகளுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். நமது மீடியா ஊழியத்திற்கு தகுந்த, திறம்பட செய்கிற ஏற்ற ஆட்கள் நமக்கு கிடைக்க வேண்டும். கர்த்தருக்குச் சித்தமானால் நவம்பர் 6-ஆம் தேதி முதல் 11-ஆம் தேதி வரை செம்பட்டி வானத்தின் வாசல் எழுப்புதல் ஜெபமையத்தில் வைத்து ஆண்டு இறுதி சிறப்பு உபவாச ஜெபம் வைத்துள்ளோம். ஆண்டின் கடைசி நாட்களில் கர்த்தருடைய பாதத்தில் காத்திருக்கவும், புதிய வருடத்தின் ஆசீர்வாதத்திற்காக ஜெபிக்க உள்ளோம். தேவனால் ஏவப்பட்டவர்கள் யாவரும் வரலாம், காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை நடைபெறும். கடைசி நாள் வழக்கம் போல இரண்டாவது சனிக்கிழமை நடைபெறும் உபவாச ஜெபத்தோடு ஜெபநாட்கள் நிறைவடையும். தொடர்ந்து எங்களுக்காக, இயேசு வாழ்கிறார் ஊழியங்களுக்காக ஜெபிக்க மறவாதிருங்கள். உங்கள் மேலான, உதாரத்துவமான காணிக்கையினாலும் தாங்கி உதவி செய்யுங்கள். கர்த்தருடைய மாறாத கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக.

*இயேசுவின் பணியில்,*

L. Vincent Raj

(சகோ. L. வின்சென்ட்ராஜ்)





# எழுப்புதல் காற்று


சகோ. L. வின்சென்ட்ராஜ்

இவைகளுக்குப் பின்பு, பூமியின் நான்கு திசைகளிலும், நான்கு தூதர்கள் நின்று பூமியின் மேலாவது, சமுத்திரத்தின் மேலாவது, ஒரு மரத்தின் மேலாவது காற்று அடியாதபடிக்கு, பூமியின் நான்கு காற்றுகளையும் பிடித்திருக்கக் கண்டேன். வெளி 7:1

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த செய்தியின் மூலம் உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். ஆண்டவராகிய தேவன் இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷனாகிய யோவான் பத்முதீவிலே வயதான காலத்தில் இருந்த போது கடைசி நாட்களில் நடக்கப் போவதை, சம்பவிக்கப் போவதை யோவானுக்கு வெளிப்படுத்தினார். அப்படி வெளிப்படுத்திய அநேக காரியங்களில் ஒன்று தான் இந்த வார்த்தைகள். நான்கு தூதர்கள், நான்கு திசைகளிலுமிருந்து காற்றுகளைப் பிடித்திருக்க கண்டேன் என்ற வார்த்தை. காற்றை யாராவது தடுக்க முடியுமா? பிடிக்க முடியுமா? அது எங்கிருந்து வருகிறது? எங்கு போகிறது என்று யாருக்கும் தெரியாது. இயேசுவே யோவான் 3:8-ல் சொல்லியிருக்கிறார்.

மட்டுமல்ல அந்த காற்றுக்குத் தேவன் பண்டகசாலையை வைத்திருக்கிறார் சங் 135:7-லும், எரேமியா 10:13-ல் அவர் சத்தமிடுகையில் வானத்திலே திரளான தண்ணீர் உண்டாகிறது. அவர் பூமியின் கடையாந்திரத்திலிருந்து மேகங்களை எழும்பப் பண்ணி மழையுடனே மின்னல்களை உண்டாக்கி, காற்றைத் தமது பண்டகசாலையிலிருந்து புறப்படப் பண்ணுகிறார் இன்றைக்கு மனிதர்கள் பூமியில் வாழ்வதற்கு அத்தியாவசியமானது காற்று, தண்ணீர், உணவு அவசியம். காற்று இல்லாமல் நாம் சுவாசிக்க முடியாது. காற்று நமக்கு மிகவும் அவசியம். நாம் உயிர் வாழ்வதே தேவனுடைய சுவாசக் காற்றினால் தான். தேவன் களிமண்ணினால் பிசைந்து மனிதனை உண்டாக்கி தம்முடைய ஜீவசுவாசத்தை, ஜீவகாற்றை அந்த மண்ணின் மேல் ஊற்றினார். மனிதன் உயிருள்ளவனாக மாறினான்.

அதே ஜீவகாற்றை ஆண்டவராகிய தேவன் திரும்ப வாங்கிக் கொண்டால் சங் 104:29-ல் நீர் உமது முகத்தை மறைக்க திகைக்கும், நீர் அவைகளின் சுவாசத்தை வாங்கிக் கொள்ள அவைகள் மாண்டு தங்கள் மண்ணுக்குத் திரும்பும். தேவனுடைய ஜீவகாற்று நம்மேல் வீசுகின்றது. தேவனுடைய காற்று நமக்கு மிகவும் அவசியம். அது இல்லாமல் நம்மால் வாழ முடியாது. அவர் காற்றை வைத்துப் பூமியில் பலத்த காரியங்களை, அற்புதங்களைச் செய்தார். ஆதி 8:1-ல் தேவன் நோவாவையும், அவனுடனே பேழையிலிருந்த சகல காட்டுமிருகங்களையும், சகல நாட்டுமிருகங்களையும் நினைத்தருளினார். தேவன் பூமியின் மேல் காற்றை வீசப்பண்ணினார். அப்பொழுது ஜலம், அமர்ந்தது, வடியத் தொடங்கியது, குறையத் தொடங்கியது நோவா பேழையிலிருந்து வெளியே வந்தார்.



ஒருமுறை சுனாமியிலே ஒரு குடும்பம் சிக்கிக் கொண்டது. அந்த நாளில் விடுமுறையைக் கழிப்பதற்காக கடற்கரையிலே குடும்பமாகக் கூடினார்கள். திடீரென அலைகள் எழும்பி அவர்களை தூக்கி வீசியது. தனித்தனியே தூக்கி வீசப்பட்டார்கள். என்ன நடக்கிறது என்று தெரியவில்லை. அந்த சகோதரி நிலைமையைப் புரிந்து கொண்டு, ஏதோ நடக்கிறது என்று திரும்பிப் பார்த்தால் கணவனைக் காணவில்லை. இயேசுவே, இயேசுவே என்று கூச்சலிட்டார்கள். அப்பொழுது ஒரு சுனாமி தண்ணீரோடு வந்து தனித்தனியாய் பிரிந்து போன, அந்த குடும்பத்தை ஒரு மணல் மேட்டில் ஒன்று சேர்த்தது. எல்லாரும் அதே இடத்தில் ஏறக்குறைய 5 மணி நேரத்திற்கு மேலாக இயேசுவே இயேசுவே என்று துதித்து நடுக்கத்துடனே கர்த்தருக்கு நன்றி சொல்லி உயிர் பிழைத்தார்கள். தேவன் அனுப்பிய காற்று அவர்களை மறுபடியும் ஒன்று சேர்த்து காப்பாற்றியது. அவர் காற்றை தமது பண்டகசாலையிலிருந்து புறப்படபண்ணி அவருடைய ஜனங்களுக்கு நன்மை செய்து தப்புவிக்கிறார்.

அதுமட்டுமல்ல இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலிருந்து புறப்பட்டு செங்கடலுக்கு அருகே போன போது, அதை எப்படி கடப்பது என்று தெரியவில்லை. ஒருவருக்கும் நீச்சல் தெரியாது, பின்பாக பார்வோனுடைய ராணுவம் துரத்தி வருகிறது, கொடிய இக்கட்டில் சிக்கி தவித்த அவர்கள், ஆண்டவராகிய தேவனை நோக்கி முறையிட்டு, கண்ணீரோடு கதறினார்கள். அப்பொழுது என்ன நடந்தது தெரியுமா? யாத் 15:8-ல் உமது நாசியின் சுவாசத்தினால் ஜலம் குவிந்து நின்றது. வெள்ளம் குவியலாக நிமிர்ந்து நின்றது, ஆழமான ஜலம் நடுக்கடலிலே உறைந்து போயிற்று. ஆம் ஆண்டவராகிய தேவன் காற்றை அனுப்பி, செங்கடலை இரண்டாக பிளந்து ஜனங்கள் மூழ்காமல், நனையாமல் அற்புதமாய் கரை சேர்த்தார். காற்றை தம்முடைய பண்டகசாலையிலிருந்து அனுப்பி பாதுகாக்கிறார். தம்முடைய ஜனங்களை தப்புவிக்கிறார்.

அவர் காற்றை அனுப்பி அற்புதங்களைச் செய்து, தம்முடைய ஜனங்களுக்கு உணவு கொடுக்கிறார். எண் 11:31-ல் அப்பொழுது கர்த்தரிடத்திலிருந்து புறப்பட்ட ஒரு காற்று, சமுத்திரத்திலிருந்து காடைகளை அடித்துக் கொண்டு வந்து, பாளையத்திலும், பாளையத்தைச் சுற்றிலும் இந்தப்பக்கம் ஒருநாள் பிரயாணம் மட்டும், அந்தப்பக்கம் ஒருநாள் பிரயாணம் மட்டும் தரையின் மேல் இரண்டு முழஉயரம் விழுந்து கிடக்கச் செய்தது இறைச்சிக் கேட்ட ஜனங்களுக்கு தேவன் காடையை அனுப்பி, காற்றை அனுப்பி அவர்கள் தேவைகளைச் சந்தித்து, பலத்த காரியங்களைச் செய்தார். அவர் காற்றை தமது பண்டகசாலையிலிருந்து அனுப்புகிறார், அது தேவன் விரும்புகிற அற்புதங்களைச் செய்கிறது, விடுதலையைத் தருகிறது.

ஆம் பிரியமானவர்களே, இன்றைக்கு காற்று அவசியம், காற்று இல்லாமல் எதுவும் அசையாது. அந்த காற்று எல்லாருக்கும் வீசாது. தனக்கு இஷ்டமானவருக்கு, தேவனுக்குப் பிரியமானவர்களுக்குத் தான் வீசும்.




யோவான் 3:8-ல் காற்றானது தனக்கு இஷ்டமான இடத்தில் வீசுகிறது. அதின் சத்தத்தைக் கேட்கிறீர்கள் என்றார். ஆம் யார் யார் எல்லாம் தேவனுக்குப் பிரியமானவர்களாக, அவருக்கு அன்பானவர்களாக இருக்கிறார்களோ, அவர்கள் மேல் எல்லாம் இந்த காற்று அடிக்க வேண்டும், வீச வேண்டும். அப்பொழுது தான் நாம் சுவாசிக்க முடியும், ஜீவிக்க முடியும். கர்த்தருடைய பாதையில் நடந்து, அவர் விருப்பத்தை நிறைவேற்ற முடியும். ஆவியானவரே காற்றாய் வாரும் என்று சொல்லப்பட்டுள்ளது. ஆனால் இந்த காற்றை நான்கு தூதர்கள் பூமியின் மீதோ, மரங்களின் மீதோ வீசாதபடிக்கு கையில் இறுகப் பிடித்திருக்க கண்டேன் என்று யோவான் எழுதுகிறார். ஏன் எப்பொழுது அவர்கள் அந்த காற்றை விடுவார்கள், அதனால் பூமியில் என்ன நடக்கும் என்பதைப் பார்ப்போம்.

## அது எழப்புதல் காற்று

அப்பொழுது அவர் என்னைப் பார்த்து, நீ ஆவியை நோக்கி தீர்க்கதரிசனம் உரைத்து மனுபுத்திரனே நீ தீர்க்கதரிசனம் உரைத்து, ஆவியை நோக்கி கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், ஆவியே, நீ காற்றுத்திசை நான்கிலுமிருந்து வந்து, கொலையுண்ட இவர்கள் உயிரடையும்படிக்கு இவர்கள் மேல் ஊது என்றார். எசேக்கியேல் தீர்க்கதரிசியின் ஊழியத்தில் முதலாவது கல்லறையில் எலும்புக்கூடுகளின் மத்தியில் தான் கர்த்தர் அவரைக் கொண்டு போய் ஊழியப் பயிற்சிக் கொடுத்தார். இன்றைக்கு தேவன் நம்மை அப்படி அனுப்பினால் நிச்சயமாய் போக மாட்டோம், போனாலும் செய்ய மாட்டோம். அங்கே அவர் பார்த்த காட்சி எலும்புக் கூடுகள். தலைகள் ஒரு பக்கம், கைகள் ஒருபக்கம், கால்கள் ஒருபக்கம் எல்லாம் தனித்தனியே சிதறிக்கிடக்கிறது. இன்றைக்கு இந்த எலும்புகள் தேவப்பிள்ளைகள் தான். கர்த்தருடையவர்கள், அவர்கள் காணாமற் போனவர்கள், பூமியெங்கும் சிதறிக்கிடக்கிறார்கள்.

அமெரிக்காவில் இருக்கிறார்கள், ஐரோப்பாவில் இருக்கிறார்கள். ரஷ்யாவில் இருக்கிறார்கள். அவர்கள் தேவனை மறந்து, அவருக்காக வாழாமல், ஜெபிக்காமல், பரிசுத்த ஆவியின் ஜீவன் இல்லாமல் உலர்ந்து போய் பட்டுப்போய், அனலுமின்றி, குளிருமின்றி வேதனையோடு வாழ்கிறார்கள். தேவசமூகத்தை விட்டு நாடு கடத்தப்பட்டிருக்கிறார்கள். சாத்தானால் சிதறடிக்கப்பட்டிருக்கிறார்கள். யார் நம்மை ஒன்று சேர்ப்பது யார் நம்மை இணைப்பது, யார் நம்மைக் கூட்டிச் சேர்ப்பது என்று பெலனுக்காக ஏங்கித் தவிக்கிறார்கள். இப்படிப்பட்ட எலும்புகள் ஒன்று சேர்ந்து, ஜீவனை அடைய வேண்டுமென்றால் இந்த தேவனுடைய ஆவியானவர் நான்கு திசைகளிலுமிருந்து வர வேண்டும், அந்த எலும்புகளில் இறங்க வேண்டும். அதற்கு ஆவியானவர் காற்றாய் வீச வேண்டும். காற்றாய் வர வேண்டும். இப்பொழுது அந்த காற்று வீசாதபடிக்கு, வராதபடிக்கு நான்கு தேவ தூதர்கள் அவைகளை தடுத்துப் பிடித்து வைத்திருக்கிறார்கள் என்று வெளிப்படுத்தல் 7:1-ல் பார்த்தோம்.



தேவனுடைய தூதர்கள் காற்றை இறுக, கெட்டியாய் பிடித்திருக்கிறார்கள், காரணம் அவைகளால் தேவனுடைய பிள்ளைகள் சேதமடையாதபடிக்கு, மரமாவது, சூரியனாவது, சமுத்திரமாவது, மனிதர்களாவது சேதமடையாதபடி, மனிதர்களுடைய நெற்றியில் அடையாளம் போட்டு தீருமளவும் அந்தக் காற்றை விடாமல் தடுத்து இறுகப் பிடித்திருக்கிறார்கள். இன்னும் உலகத்தின் ஜனங்கள் மனந்திரும்பவில்லை, பொல்லாத வழியை விடவில்லை. தேவனுடைய நாமத்தை தரிக்காமல், முத்திரையைப் பெறாமல் காலம் தாழ்த்திக் கொண்டு தேவனுடைய பூரணத்தைப் பெறாமல் பாதியிலேயே நின்று விட்டார்கள். இப்படி அறை குறையாய் தேவனுக்குள் வாழ்கிறவர்களை காற்று அடித்துக் கொண்டு போய், அவர்களை காற்று தூற்றும் போது பதருக்கு ஒப்பாகி விடுவார்கள். ஆகவே தான் யோவான்ஸ்நானகன் சொல்லுகிறார்

லூக்கா 3:17-ல் தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது, அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி கோதுமையைத் தமது களஞ்சியத்தில் சேர்ப்பார், பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார் என்று சொல்லப்பட்டுள்ளது. தூற்றுக்கூடையில் இருக்கும் கோதுமை அல்லது நெல், காற்று அடிக்கும் போது பதர் தனியாக, கோதுமை, நெல் தனியாக பிரிக்கப்படும்.

இயேசு சொன்னார் லூக்கா 22:31,32-ல் பின்னும் கர்த்தர் சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறது போலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு, பிரிப்பதற்கு, சிதறடிப்பதற்கு உத்தரவு கேட்டுக் கொண்டான். நானோ, உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக் கொண்டேன் என்றார். நாம் பதறாய் இருந்தால், விளையாமல் இருந்தால், அறுவடைக்குப் பயிர் முற்றாமல் இருந்தால் இந்தக் காற்று பரத்திலிருந்து இறங்கும் போது பதறாய் போய் காணாமல் போய்விடக் கூடாது. பறந்து போய்விடக் கூடாது என்பதற்காக, தேவன் எதிர்பார்க்கிற ஒரு பரிசுத்தம், விசுவாசம், நிறைவு, பரிபூரணம் அடைய வேண்டுமென்று தூதர்கள் இந்த காற்றினாலே ஜனங்கள், மனுக்குலம் சேதமடையாதபடிக்கு இறுகப்பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு ஜனங்கள் உலக மாயையை விட்டு, பிசாசின் வழியை விட்டு, தேவனை சரியான விதத்தில் பின்பற்றினால், அவர் விரும்புகிற ஒரு வாழ்க்கை வாழ்ந்தால், அவருடைய முத்திரையைப் பெற்று,



அவருடைய நாமத்தைத் தரித்தால் அப்பொழுது இந்த தேவதூதர்கள் தாங்கள் பிடித்திருக்கிற காற்றை விடுவார்கள். அதுவரை அது தடை செய்யப்பட்டிருக்கிறது.

அதனால் தான் ஆண்டவராகிய தேவன் எசேக்கியேலுக்கு தோன்றி இந்த எலும்புகள் உயிரடைய ஒன்று சேர நீ பரிசுத்த ஆவியானவரை நோக்கி, ஆவியே, நீ நான்கு திசைகளிலுமிருந்து புறப்பட்டு வா, என்று தீர்க்கதரிசனம் உரைக்க வேண்டும். விசுவாச வார்த்தைகளைப் பேச வேண்டும். அதுவரை தேவன் விரும்புகிற எழுப்புதல், தேவன் விரும்புகிற உயிர்மீட்சி வராது. அதை நாம் அறிந்து, விளங்கிக் கொள்ள வேண்டும். கருத்தோடு, ஆத்தும பாரத்தோடு ஜெபித்தால் தான் தேவதூதர்கள் அந்தக் காற்றை விடுவார்கள். அந்த தேவக்கட்டளை வரும் வரை அவர்கள் இறுக கெட்டியாய் பிடித்துக் கொள்வார்கள். இதைத்தான் தேவன் எசேக்கியேலுக்குக் காண்பித்து, இந்த உலர்ந்த போன, பட்டுப்போன, காய்ந்து போன, உயிர் போன எலும்புகள், தேவப்பிள்ளைகள் உயிரடையும்படி தேவன் எசேக்கியேலுக்கு இந்த எலும்புகளைக் குறித்துக் காண்பித்து, எழுப்புதலுக்காக, பின்மாரி மழைக்காக வேண்டிக் கொள்ளவும், ஜெபிக்கவும், தீர்க்கதரிசனம் உரைக்கவும் கட்டளையிட்டார்.


அப்பொழுது தான் அவர், ஆவியே காற்றாய் வாரும், நான்கு திசைகளிலுமிருந்து வாரும், தேவனால் உண்டாக்கப்பட்ட, தேவனை விட்டு பிரிந்த இந்த ஜனங்கள் எல்லாம் உலகத்தில் எந்த இடத்தில் இருந்தாலும், அவர்கள் ஒன்று சேரட்டும் என்று தேவ தரிசனத்தை எசேக்கியேலுக்கு காண்பித்தார். அதன்படி அவர் ஆவியே வாரும், அக்கினியே வாரும், காற்றாய் வாரும், நான்கு திசைகளிலுமிருந்து புறப்பட்டு வாரும் என்று தீர்க்கதரிசனம் உரைத்தார். இன்றைக்கு தேவனிடத்திலிருந்து காற்று இறங்கி வர வேண்டும். தேசங்களின் மேலும் பூமியிலுள்ள தேவ பிள்ளைகள் மேல் இறங்கி உலர்ந்த எலும்புகள் சேனையாய் எழுந்து நிற்பார்கள்.

இதற்குத் தான் இந்த காற்றை அப்போஸ்தலர்கள் மேல் வீட்டறையில் கூடிச் ஜெபித்த போது தேவன் அனுப்பினார். அப் 2:2-ல் அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல, வானத்திலிருந்து இறங்கி சீஷர்களை நிரப்பியது. அப்பொழுது அவர்கள் உயிரடைந்து பெலனடைந்து வானத்தின் கீழ் இருந்தவர்கள் ஒன்று சேர்க்கப்பட்டார்கள். சிதறிப்போன எல்லாரும் ஓரிடத்தில் கூடினார்கள். இந்த ஆவியானவருடைய காற்று இன்றைக்கு நம்மேல், நம் குடும்பத்தின் மேல், தேசத்தின் மேல், சபைகளின் மேல் பலமாய் ஊற்றப்பட வேண்டும். காற்று இறங்கி, தேவன் நியமித்த இடங்களுக்கு நம்மை கொண்டு செல்ல வேண்டும். ஆண்டவராகிய இயேசு சொன்னார் காற்றானது தனக்கு இஷ்டமான இடத்தில் வீசுகிறது, அது எங்கிருந்து வருகிறது, எங்கு போகிறது என்று ஒருவருக்கும் தெரியாது. இன்றைக்குத் தேவன் பலத்த காற்றை நமக்குள் அனுப்பி, உலர்ந்த எலும்புகளை உயிரடையச் செய்து, தம்முடைய நாமத்தின் நிமித்தம் எலும்புகளை உயிரடையச் செய்து ஜீவனுள்ளவர்களாக மாற்றுவாராக. தூதர்கள் பிடித்து வைத்திருக்கிற காற்றைக் கட்டவிழ்த்து தம்முடைய ஜனங்களை உயிரடையச் செய்வாராக.

## காற்றின் ஊழியம்

ஊழியர்களை காற்றுகளாக மாற்றி, ஊழியம் செய்ய வைக்கிறார். அவர் தம்முடைய தூதர்களை காற்றுகளாகவும், தம்முடைய

ஊழியக்காரர்களை அக்கினி ஜீவாலைகளாகவும் செய்கிறார். இப்பொழுது இருக்கிற விஞ்ஞான உலகத்தில் டிரங்கால் புக் பண்ணி பேசியது போய், வீட்டுக்கு வீடு போன் பேசியது போல இதன் பிறகு மொபைல் போன், பட்டன் போன் வந்தது. இப்போ அதுவும் போய் ஆண்ட்ராய்டுச் போன் வந்து விட்டது. வேகமாக உலகம் வேலை செய்கிறது. 2G போய் 3G 4G 5G வேகத்தில் உலகம் ஓடிக் கொண்டிருக்கிறது. ஆனால் தேவனுடைய காரியத்தில் நாம் இன்னும் பழைய வேகத்தில் அதே ஜெபம், அதே ஊழியம், அதே காரியங்களைச் செய்து, நமமுடைய ஓட்டம் ஆகாப்பின் ஓட்டத்தைக் காட்டிலும் குறைந்து விட்டது. எலியாவைப் பாருங்கள் அக்கினி ஜீவாலையாக ஜீவித்தவர். 1 இராஜா 18:45,46-ல் ஆகாப் இரதத்தில் ஏறி யெஸ்ரயேலுக்கு போனான், கர்த்தருடைய கை எலியாவின் மேல் இருந்தபடியால், அவன் தன் அரையைக் கட்டிக் கொண்டு



யெஸ்ரயேலுக்கு வருமட்டாக ஆகாபுக்கு முன் ஓடினான். ஆகாபின் குதிரை ஓட்டத்தைக் காட்டிலும், எலியாவின் ஓட்டம் வேகமாக, அதிகமாக இருந்தது.

அதற்குத்தான் ஆண்டவராகிய தேவன் நமக்கு பரிசுத்த ஆவியைத் தந்து, புது பெலன் கொடுத்து மான்கால்களைப் போல நம் கால்களை மாற்றி, ஏசாயா 40:31-ல் கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களே, புதுபெலன் அடைந்து, கழுகுகளைப் போல செட்டைகளை அடித்து எழும்புவார்கள், அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள். நடந்தாலும் சோர்ந்து போகார்கள். ஆம் நம்முடைய ஓட்டத்தில், ஊழிய வாழ்க்கையில், ஜெப வாழ்க்கையில் சோர்ந்து போகாதபடிக்கு வேகம் குறைந்து போகாதபடிக்கு ஆகாப்பின், உலக மனிதர்களின் ஓட்டத்தைக் காட்டிலும் ஆவிக்குரியவர்களின் ஓட்டம் வேகமாகும்படி, அதிகமாகும்படி கழுகுகளின் இளமையைப் போல் நம்முடைய இளமையைப் புதுப்பிக்கிறார். இதைத்தான் சங் 103:5-ல் சங்கீதக்காரன் சொல்லுகிறார் கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வால வயது போலாகுகிறது. இதை கத்தோலிக்க மொழிபெயர்ப்பில் கழுகுகளின் இளமையைப் போல உங்கள் பெலத்தை, இளமையை புதுப்பிக்கிறார் என்று வேதம் சொல்லுகிறது. எதற்கு நமக்காக, உலக வேலைக்காக இல்லை. கர்த்தருடைய வேலையை செய்ய, கர்த்தருடைய ராஜ்யத்தைக் கட்ட, அவருடைய நாமத்தை உயர்த்த, அவருக்காக ஜீவிக்க, அவருடைய வேலையைச் செய்ய, அவர் தம்முடைய ஊழியக்காரரை காற்றுகளாகவும், அக்கினி ரதங்களாகவும் மாற்றுகிறார்.

பிலிப்பு என்பவரைப் பாருங்கள், அப்போஸ்தலர் 8-ஆம் அதிகாரத்தில் அவரைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. சமாரியாவிலே கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தான். பிலிப்பு செய்த அதிசயங்களை ஜனங்கள் கேள்விப்பட்டு, கண்டு அவனால் சொல்லப்பட்டவைகளை ஒருமனப்பட்டு கவனித்தார்கள். அநேகரிலிருந்து அசுத்த ஆவிகள் வெளியேறியது. பிலிப்பு என்பவர் மகிமையான அப்போஸ்தலர்,

எல்லாரைக் காட்டிலும் பயங்கரமான, வல்லமையான ஊழியத்தைச் செய்தார். அது மட்டுமல்ல எத்தியோப்பிய வர்த்தக அமைச்சரான கந்தாகே எருசலேமுக்கு தேவனைத் தொழுது கொள்ள, இயேசுவை அறிந்து கொள்ள, இரதத்தில் வந்திருந்தார். அப்பொழுது ஆவியானவர் பிலிப்புவை நோக்கி நீ, போய் அந்த இரதத்துடனே சேர்ந்து கொள் என்ற அப் 8:29-ல் சொன்னார். அவர் ஏசாயா 53-ம் அதிகாரத்தை வாசித்துக் கொண்டு போகும் போது, அதன் அர்த்தம் உனக்குப் புரிகிறதா என்று கேட்டு பிலிப்பு அவருக்கு விளக்கம் கொடுத்து, சுவிசேஷத்தை அறிவித்து ஞானஸ்நானத்திற்கு நேராக நடத்தினார். அதன்பிறகு ஆவியானவர் பிலிப்புவை கொண்டு போய் விட்டார். பின்பு ஆசோத்தில் காணப்பட்டான். இது எப்படி நடந்தது. ஆவியானவர் காற்றாய் அவரை தூக்கிக் கொண்டு போய், அவரை சுவிசேஷம் அறிவிக்கவும், அற்புதங்களைச் செய்யவும் பயன்படுத்தினார். இதைத்தான் வேதம் சொல்லுகிறது அவர் தம்முடைய தூதர்களை, ஊழியர்களை காற்றுகளாகவும், ரதங்களாகவும் மாற்றுகிறார். இனி நடந்து அல்லது அலைந்து விமானத்திலோ, காரிலோ நாம் போய் ஊழியம் செய்ய முடியாது. ராஜாவின் கட்டளை அவசரமாக இருக்கிறது. முழு உலகத்திற்கு நாம் வேகமாய் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும். கர்த்தருடைய வேலையைச் செய்ய வேண்டும். அதற்குப் பரிசுத்த ஆவியானவருடைய காற்று நம்மேல் இறங்க வேண்டும். நாம் அவரால் தூக்கி செல்லப்பட



வேண்டும் இனி நம்முடைய பெலனை விருதாவாக செலவழிக்காமல், நம்முடைய கிருபையை, இரட்சிப்பை வீணடிக்காமல், காலத்தை சரியாய் பயன்படுத்தி தேவனுடைய எழுப்புதலிலே நாம் பங்குபெற வேண்டும். அப்பொழுது தான் சிதறிக்கிடக்கிற எலும்புகளை, காணாமற் போன ஜனங்களை தேவனுடைய மந்தையில் பாதுகாப்பாய் கொண்டு வர முடியும். ஆங்காங்கே சிதறிக்கிடக்கிற இங்கிலாந்திலே, அமெரிக்காவிலே, ஆப்பிரிக்காவிலே ஆசியாவிலே தனித்தனியாய் கிடக்கிற எலும்புகளை எல்லாம் தேவன் ஒன்று சேர்த்து, தோலினால் மூடி, சதையால் நிரப்பி, ஒரு மகாப்பெரிய சேனையாய் காலூன்றி நிற்க, காற்றின் வேகத்தைக் காட்டிலும் ஆவியானவர் வேகத்தை நமக்கு அதிகப்படுத்துகிறார். இதற்குத் தான் காற்று வேண்டும். காற்றே, நீ நான்கு திசைகளிலுமிருந்து புறப்பட்டு வா, இந்த உலர்ந்த எலும்புகளின் மேல் இறங்குவாயாக என்றார். இந்த வாஞ்சையோடு நாம் ஜெபிக்கின்ற போது, இந்த வாஞ்சையோடு நாம் ஊழியம் செய்கின்ற போது, தன் கையில் காற்றைப் பிடித்து வைத்திருக்கிற அந்த தூதர்கள் அந்த காற்றை பண்டகசாலையிலிருந்து அனுப்பி, தேவனுடைய திட்டத்தை, எழுப்புதலை, எலும்புகள் உயிரடைகிற காற்றை ஜனங்கள் மேல் வீசச் செய்வார்கள். என் ஆண்டவராகிய தேவன் தாமே இந்த பரிசுத்த ஆவியானவருடைய காற்றை உங்கள் மேல் வீசச் செய்து நீங்கள் தேவனோடு இணைக்கப்பட்டு மகா சேனையாய் காலூன்றி நிற்கச் செய்வாராக. உங்களை உன்னதங்களில் பறக்கச் செய்வாராக



# உன் தலையை உயர்த்துவார்

சகோதரி. கலா வின்செண்ட்ராஜ்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

கிறிஸ்துவில் பிரியமான சகோதரிகளே. இந்த இதழ் வழியாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். நம் தலையை உயர்த்துகிற தேவனாகிய கர்த்தர் நம்மோடு இருக்கிறார். பலவிதமான பாடுகள், கண்ணீர், கவலைகள், நிந்தைகள், அவமானங்கள், கடன்பிரச்சனைகள், கேவலமாக நினைக்கப்பட்ட நிலையில் தலைகுனிந்து நிற்கிறீர்களா? உங்களைப் பார்த்து தான் ஆண்டவர் சொல்கிறார் உன் தலையை உயர்த்துவேன் என்கிறார் ஆதி 40:13-ல் மூன்று நாளைக்குள்ளே பார்வோன் உன் தலையை உயர்த்தி, உன்னை மறுபடியும் உன் நிலையிலே நிறுத்துவார். முன்னே அவருக்குப் பானம் கொடுத்து வந்த வழக்கத்தின்படி பார்வோனின் பாத்திரத்தை அவர் கையிலே கொடுப்பாய் என்று யோசேப்பு, பார்வோனுக்கு பானபாத்திரக்காரனாய் இருந்த ஒரு மனிதனைப் பார்த்து சொல்கிறதை நாம் பார்க்கிறோம். ஏற்கனவே ஒரு உத்தியோகத்தில் இருந்தவன், இப்போது அதை இழந்து சிறைப்பட்டும் போய் விட்டான். யோசேப்பு சிறைச்சாலையில் இருக்கும் போது அவனும் ஏதோ ஒரு தவறினால் சிறைக்கு வந்து விட்டான். அவனது கனவு என்னவென்றால் ஆதி 40:9-11-ல் பானபாத்திரக்காரரின் தலைவன் யோசேப்பை நோக்கி என் சொப்பனத்தில் ஒரு திராட்சச்செடி எனக்கு முன்பாக இருக்க கண்டேன். அந்த திராட்சச்செடியிலே மூன்று கொடிகள் இருந்தது. அது துளிர்க்கிறதாயிருந்தது, அதில் பூக்கள் மலர்ந்திருந்தது, அதின் குலைகள் பழுத்த பழங்களாயிருந்தது. பார்வோனுடைய பாத்திரம் என் கையிலே இருந்தது. நான் அந்த பழங்களைப் பறித்து, அவைகளைப் பார்வோனுடைய பாத்திரத்திலே பிழிந்து, அந்தப் பாத்திரத்தைப் பார்வோனுடைய கையிலே கொடுத்தேன் என்றான். அதற்கு தான் யோசேப்பு இந்த அர்த்தத்தைச் சொல்கிறான் மூன்று நாளில் பார்வோன் உன் தலையை உயர்த்துவார், உன்னை மறுபடியும் உன் நிலையிலே நிறுத்துவார். நீ முன்பு போல அவருடைய வேலையைச் செய்வாய். என்றான். எத்தனை மகிழ்ச்சி, ஒரு மனிதன் செய்த குற்றத்திற்காக வேலை நீக்கம் செய்யப்பட்டு திரும்பவும் அவன் தன் நிலையில் நிறுத்தப்படுவது, சேர்த்துக் கொள்ளப்படுவது என்பது எத்தனை பெரிய பாக்கியம் பாருங்கள். அதற்கு காரணம் அவன் கண்களுக்கு முன்பாக திராட்சச்செடி இருந்ததாம்.

இன்றைக்கு நம்முடைய கண்களுக்கு முன்பாக இந்த திராட்சச்செடி இருந்தால் நம் தலை உயர்த்தப்படும் அந்த திராட்சச்செடி யார்? அவர் தான் இயேசு. யோவான் 15:1-ல் நான் மெய்யான திராட்சச்செடி, என் பிதா திராட்சத் தோட்டக்காரர் என்று சொல்கிறார். அந்த திராட்சச் செடி அவர் கண் முன்பாக இருந்தது. தாவீது கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன் என்கிறார். அவன் சிறையில் இருந்தாலும், கர்த்தரை, திராட்சச் செடியைத்தான் கண் முன்பாக வைத்திருக்கிறான். கர்த்தர் அவன் தலையை மறுபடியும் உயர்த்தி, அவன் ஏற்கனவே என்ன உத்தியோகம் செய்தானோ அதே நிலையில் உயர்த்தினார். நம்முடைய வாழ்விலும் நாம் திராட்சச் செடியாகிய இயேசுவை நம் கண் முன்பாக வைப்போம். அதனால் நாமும் உயர்த்தப்படுவோம்.



அதே போல அப்பம் கொடுக்கிற சுயம்பாகி என்று சொல்லப்படுகிற மனிதன், தானும் கண்ட சொப்பனத்தைச் சொல்கிறான். அதில் மூன்று வெள்ளைக் கூடைகள் என் தலையின் மேல் இருக்கிறதாக கண்டேன் என்கிறான். அவனுக்கு நல்வார்த்தை கிடைக்கவில்லை. தலையில் வைத்து வியாபாரம் செய்வது போல, தேவனுடைய வேலையை வியாபாரமாக செய்த அவன் பாதிக்கப்பட்டுப் போனான். இந்தப் பார்வோனைப் போல கர்த்தர் நம்மைக் காண்கிறார். அவருக்கு முன்பாக பெயருக்காக, புகழுக்காக, பணத்துக்காக, எதற்காக அவரை பின்பற்றுகிறோம் என்பதை அவர் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒருவன் கண் முன்பாக வைத்திருந்தான், ஒருவன் தலையின் மேல் வைத்திருந்தான். மேட்டிமையோ, பெருமையோ, அகந்தையோ நம்மை உயர்த்தாது. பாத்திரத்தை தன் கையில் வைத்திருந்தவன் உயர்த்தப்பட்டான். நாமும் மிகுந்த மனத்தாழ்மையோடு இருந்தால் உயர்த்தப்படுவோம். தன்னைத் தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்று இயேசு சொன்னார்.

யோசேப்பைக் குறித்து, அவன் தகப்பன் யாக்கோபு ஆசீர்வதித்த போது ஆதி 49:26-ல் உன் தகப்பனுடைய ஆசீர்வாதங்கள், என் பிதாக்களுடைய ஆசீர்வாதங்களுக்கு மேற்பட்டதாயிருந்தது. நித்திய பர்வதங்களின் முடிவுமட்டும் எட்டுகின்றன. அவைகள் யோசேப்புடைய சிரசின் மேலும், தன் சகோதரரில் விசேஷித்தவனுடைய உச்சந்தலையின் மேலும் வருவதாக! என்று ஆசீர்வதித்தான். தகப்பன், தாயின் ஆசீர்வாதம் பிள்ளைகளுக்கு வேண்டும். அவர்களுக்கு பிரியமாக நடந்தாலே அந்த ஆசீர்வாதம் நமது உச்சந்தலையில் வந்து இறங்கும். அவர்களை ஏதாவது காரியத்தில் மனம் நோகப்பண்ணியிருந்தால், ஆண்டவர் இயேசுவிடம் மன்னிப்பு பெற வேண்டும். யோசேப்பை மனமுவந்து யாக்கோபு ஆசீர்வதித்த ஆசீர்வாதத்தை உபா 33:16-ல் நாடும் அதின் நிறைவும் கொடுக்கும் அருமையான தானியங்களினாலும் ஆசீர்வதிக் கப்படுவதாக. முட்செடியில் எழுந்தருளினவரின் தயை யோசேப்புடைய சிரசின்மேலும்,

தன் சகோதரரில் விசேஷித்தவனுடைய உச்சந்தலையின் மேலும் வருவதாக! என்று ஆசீர்வதிக்கிறான் என்கிறதை வாசிக்கிறோம். அதே ஆசீர்வாதம் நம் வாழ்விலும் நிச்சயம் வரும்

## நாங்கள் மிகவும் தாழ்த்தப்பட்டு போனோம்

உயர்வுக்கு எதிர் சொல் தாழ்வு. கர்த்தர் நம்மை உயர்த்த விரும்புகிறார். ஆனால் இன்றைக்கு நமது வாழ்வு எப்படி இருக்கிறது. சங் 79:8-ல் பூர்வகாலத்து அக்கிரமங்களை எங்களுக்கு விரோதமாக நினையாதேயும், உம்முடைய இரக்கங்கள் சீக்கிரமாய் எங்களுக்கு நேரிடுவதாக, நாங்கள் மிகவும் தாழ்த்தப்பட்டுப் போனோம். சவுல் ராஜா நாள்தோறும் துரத்தி கொண்டு வரும்போது, ராஜாவின் மருமகனாய் இருந்தாலும், காரணமில்லாமல் பொறாமையினால் மாத்திரம் தாவீது ஓடிக்கொண்டேயிருந்தான். சங் 142:6-ல் என் கூக்குரலுக்குச் செவிகொடும், நான் மிகவும் தாழ்த்தப்பட்டேன், என்னைப் பின் தொடருகிறவர்களுக்கு என்னைத் தப்புவியும், அவர்கள் என்னிலும் பலவான்களாயிருக்கிறார்கள்



என்று தாவீது ஆண்டவரிடம் தான் தாழ்ந்து போனதைச் சொல்கிறான். ஆனாலும் பாருங்கள் சங் 27:5,6-ல் தீங்குநாளில் அவர் என்னைத் தம்முடைய கூடாரத்தில் மறைத்து, என்னைத் தமது கூடார மறைவிலே ஒளித்து வைத்து, என்னைக் கன்மலையின் மேல் உயர்த்துவார். இப்பொழுது என் தலை என்னைச் சுற்றிலும் இருக்கிற என் சத்துருக்களுக்கு மேலாக உயர்த்தப்படும். அதினிமித்தம் அவருடைய கூடாரத்திலே நான் ஆனந்த பலிகளையிட்டு, கர்த்தரைப் பாடி, அவரைக் கீர்த்தனம் பண்ணுவேன்.

தீங்குநாளில், எதிரி என்னைத் துரத்தும் போது என்னை கூடாரத்தில் ஒளித்து வைத்து கன்மலையில் என்னை உயர்த்துவார். என் தலை என்னை சுற்றிலுமிருக்கிற சத்துருக்களுக்கு மேலாக உயர்த்தப்படும் என்று விசுவாசத்தோடு சொல்கிறான். அப்படியே உங்கள் தலையையும் சத்துருக்களுக்கு மேலாக தேவன் உயர்த்துவார். எஸ்றா 9:6-ல் என் தேவனே நான் என் முகத்தை என் தேவனாகிய உமக்கு முன்பாக ஏறெடுக்க வெட்கிக் கலங்குகிறேன். எங்கள் அக்கிரமங்கள் எங்கள் தலைக்கு மேலாகப் பெருகிற்று. எங்கள் குற்றம் வானபரியந்தம் வளர்ந்து போயிற்று என்று எஸ்றா ஆண்டவரை நோக்கி ஜெபிக்கிறான். பரிசுத்த வித்து தேசங்களின் ஜனங்களோடே கலந்து போயிற்று. பிரபுக்கள், அதிகாரிகளின் கை இதில் முந்தினதாயிருக்கிறது. இஸ்ரவேல் ஜனங்கள் இந்த அந்நிய ஜனங்களின் அருவருப்புகளுக்கு விலகியிருக்கவில்லை என்று 1,2 வசனங்களில் ஜெபிக்கிறதைப் பார்க்கிறோம். பாவத்தின் அகோரம் கொடியது. யூதாவின், இஸ்ரவேலின் ராஜாக்களின் பாவமும், ஜனங்களின் பாவமும் பெருகும் போது தேவன் அந்நியர் கைகளிலே ஒப்புக்கொடுத்தார்.

யூதாவின் ராஜா யோயாக்கீன் மூன்று மாதம் தான் அரசாண்டான். அதன் பின்பு நகரம் முற்றிகை போடப்பட்ட போது அவனோடு அவன் ஜனங்களும், பிரபுக்களும், பிரதானிகள் எல்லாரும் பாபிலோனுக்குப் புறப்பட்டு போனார்கள். அவர்களை அவன் பிடித்துக் கொண்டு போனான் என்று 2 இராஜா 24:15-ல் வாசிக்கிறோம். கிட்டத்தட்ட 37 வருஷம் சிறையிருப்பில் இருக்கும் போது மெராதாக் என்னும் பாபிலோன் ராஜா இத்தனை வருஷம் சிறையிருப்பில் தாழ்த்தப்பட்டுக் கிடக்கிற

அவனை (யோயாக்கீனை) சிறைச்சாலையிலிருந்துப் புறப்படப்பண்ணி, அவன் தலையை உயர்த்தி, அவனோடே அன்பாய் பேசி, அவனுடைய சிங்காசனத்தை தன்னோடே பாபிலோனில் இருந்த ராஜாக்களின் சிங்காசனங்களுக்கு உயரமாக வைத்து, அவன் சிறைச்சாலை வஸ்திரங்களை மாற்றினான். அவன் உயிரோடிருக்கும் நாளெல்லாம் தனக்கு முன்பாக போஜனம் பண்ணும்படி செய்தான். அவனுக்கு வேண்டியதெல்லாம் ராஜாவினால் அனுதினமும் அவனுக்கு கொடுக்கப்பட்டது என்று 2 இராஜா 25:27-30-ல் வாசிக்கிறோம். சிறைப்பிடித்துக் கொண்டு போன ராஜாவே, எதிரான ராஜாவே மனமிரங்கி யோயாக்கீன் தலையை உயர்த்தி இருக்கிறான் என்றால், நீங்களும், நானும் நம்புகிற தேவனாகிய கர்த்தர் நமக்கு மனமிரங்காமல் இருப்பாரா! கட்டாயம் நமக்கு இரங்கி நம் தலையை உயர்த்துவார்.

யோவான் 13:9-ல் சீமோன் பேதுரு ஆண்டவரிடம் என் கால்களை மாத்திரமல்ல, என் கைகளையும், என் தலையையும் கூட கழுவ வேண்டும் என்றான். இயேசு சீஷர்களுடைய கால்களைக் கழுவிய போது நீர் என்னைக் கழுவக் கூடாது என்று பேதுரு தடுத்தான். ஆனால் இயேசு நான் உன்னைக் கழுவாவிட்டால் என்னோடு உனக்கு பங்கில்லை என்றார். அப்போது தான் ஆண்டவரே! என் கால்களை மாத்திரமல்ல என் கைகளையும், தலையையும் கழுவும் என்று அர்ப்பணித்தான். நாமும் கடந்த காலங்களில் எவ்வளவு தூரம் போய் கோபம் மூட்டி தாழ்த்தப்பட்ட நிலையில் எஇருந்தாலும் இப்போதே ஆண்டவருக்கு முன்பாக உங்களைத் தாழ்த்தி இயேசுவே! னக்கு இரங்கும். நான் உம்மை துக்கப்படுத்தினது உண்மை தான் இனி அப்படி செய்ய மாட்டேன் என்னை மன்னியும் என்று கண்ணீரோடு சொல்லுங்கள். தாழ்ந்து போன உங்களை, தலை குனிந்து போன உங்கள் வாழ்வை ஆண்டவர் மறுபடியும் உயர்த்தி உங்களை சிறந்த நிலையிலே மேன்மையாக வைப்பார்.



## எளியவனை குப்பையிலிருந்து உயர்த்துகிறார்

அன்னாளின் சிறுமையில் தேவன் அவளுக்கு கொடுத்த அற்புதத்தின் விளைவாக அவள் பாடிய பாட்டு 1 சாமு 2:8-ல் அவர் சிறியவனை புழுதியிலிருந்து எடுத்து எளியவனை குப்பையிலிருந்து உயர்த்துகிறார். அவர்களை பிரபுக்களோடு உட்காரவும், மகிமையுள்ள சிங்காசனத்தை சுதந்தரிக்கவும் பண்ணுகிறார்



பூமியின் அஸ்திபாரங்கள் கர்த்தருடையவைகள், அவரே அவைகளின் மேல் பூச்சக்கரத்தை வைத்தார் என்று பாடுகிறாள். இதை சங் 113:7-9-லும் பார்க்கிறோம். மலடியை பிள்ளைத்தாயாக்கி மகிழ்ச்சியோடே வீட்டிலே குடியிருக்கப்பண்ணுகிறார் என்று சொல்கிறதை வாசிக்கிறோம். எதினிமித்தம் நீங்கள் தாழ்த்தப்பட்டு எளியவர்களாய்ப் போனீர்களோ அதிலே தேவன் உங்கள் தலையை உயர்த்துவார். கடன்பட்டு வட்டி கட்ட முடியாமல், சொந்த வீடு இல்லாமல், பிள்ளைகளை படிக்க வைக்க முடியாமல், திருமணம் செய்து கொடுக்க ஒரு வழியும் தெரியாமல் கலங்கி நிற்கிறீர்களா? எளிய உங்களை தேவன் மறக்கமாட்டார், குடும்பத்தில் சமாதானத்தை இழந்து, அமைதியில்லாமல் தத்தளிக்கிறீர்களா? உங்களை இயேசு கைவிடமாட்டார். எளிய உங்களை, குப்பையில் கிடக்கிற உங்களை உயர்த்துவார். சங் 3:2,3-ல் தேவனிடத்தில் அவனுக்கு இரட்சிப்பு இல்லை என்று என் ஆத்துமாவை குறித்து சொல்லுகிறவர்கள் அநேகராயி ருக்கிறார்கள். ஆனாலும் கர்த்தாவே! நீர் என் கேடகமும், என் மகிமையும், என் தலையை உயர்த்துகிறவருமாயிருக்கிறீர் என்று தாவீது ஆண்டவரை மகிமைப்படுத்துகிறான்.

இவளுக்கு எங்கே நன்மை கிடைக்கும், அவ்வளவு தான் இவர்கள் குடும்பம் இனி எழும்பாது, பிள்ளைகள் எங்கே நன்றாய் வரப்போகிறார்கள். இவர்கள் தொழில், வியாபாரம் செழிக்காது, தேவனிடத்தில் இவர்களுக்கு இரட்சிப்பு இல்லை என்று சொல்லுகிற அநேகர் முன்பாக கர்த்தர் நமது கேடகமும், மகிமையும், நம் தலையை உயர்த்துகிறவருமாயிருக்கிறார். எனவே மனம் கலங்காதீர்கள்! இயேசுவை நம்புங்கள், உங்கள் தலை உயர்த்தப்படும். அதனால் தான் தாவீது சங் 23:5-ல் என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர், என் பாத்திரம் நிரம்பி வழிகிறது. சத்துருக்களுக்கு முன்பாக என் தலையில் ஒரு அபிஷேகத்தை நீர் ஊற்றுகிறீர். அந்த அபிஷேகம் என் தலையை உயர்த்துகிறது என்று துதிக்கிறான். இன்னும் சங் 140:7-ல் ஆண்டவராகிய கர்த்தாவே! என் பெலனே, யுத்தநாளில் என் தலையை மூடினீர். எந்த ஒரு விபத்து, ஆபத்து, யுத்தங்களிலும் தலை காப்பாற்றப்பட்டு விட்டால் ஓரளவு உயிர் காப்பாற்றி விடலாம். சத்துருவின் தாக்குதல்களுக்கு நம் தலையை மூடி, நம் தலையை காப்பாற்றி உயர்த்துவார். இதுவரை தலையில் அடிபட்டு, பாதிக்கப்பட்டு நீங்கள் சேதமடைந்தது போல, இனி வாய்ப்பே இல்லை என்ற நிலையில் நீங்கள் இருந்தாலும் கூட உங்கள் தலையை மறுபடியும் உயர்த்தி, உங்களைக் குணமாக்கி நிலை நிறுத்துகிற தேவன் உயிரோடிருக்கிறார். என் ஆண்டவர் தாமே இந்த செய்தியை வாசிக்கின்ற உங்களை, உங்கள் தலையை மறுபடியும் உயர்த்தி மேன்மையான ஸ்தானத்துக்கு கொண்டு வருவாராக!.

# நீங்கள் செய்வது எல்லாம் வாய்க்கும்




சகோதரி. பிரேமாடேவிட்

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாய் இருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத்தந்து இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான், அவன் செய்வதெல்லாம் வாய்க்கும். சங் 1:2,3

கிறிஸ்துவுக்குள் அன்பான வாலிபத்தம்பி, தங்கைகளே, நாம் செய்வதெல்லாம் வாய்க்க வேண்டும் என்று விரும்பி வார்த்தையை அனுப்பி, அதை நடந்தேறும்படிச் செய்கிற (ஏசாயா 55:1) நம் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். நான் நினைக்கிறது எங்கே நடக்குது? நீ தொட்டது என்னைக்கு வாய்ச்சிருக்கு? இந்த வார்த்தைகள் இதுவரை உங்கள் வாயால் சொல்லியிருப்பீர்கள் அல்லது மற்றவர்கள் சொல்ல உங்கள் காதுகளில் கேட்டிருப்பீர்கள். ஆனால் இன்றைக்கு உங்களைப் பார்த்து கர்த்தர், சொல்லுகிறார் நீங்கள் செய்வதெல்லாம் வாய்க்கும் என்று. கடவுள் வந்தாலும் என் தலையெழுத்தை மாத்தவே முடியாது. எத்தனை தடவை Attempt, எத்தனை முறை Start பண்றது. எத்தனை வரன், என்னை விட்டுப் போய் ரொம்ப நாளாயிருச்சுனு சொல்லிக் கொண்டிருக்கிறீர்களா? எனக்கு ஏற்ற மதிப்பெண், வேலை கிடைக்கலைனு வேதனைப்படுகிறீர்களா? கவலைப்படாதிருங்கள். கர்த்தர் நிச்சயமாய் உங்கள் காரியங்களை, நீங்கள் செய்வதை வாய்க்கச் செய்வார்.

## அவர் ஆச்சரியமாய் செய்தது என்ன?

ஒருமுறை இயேசு மலைமேல் அமர்ந்து வசனங்களைப் போதித்துக் கொண்டிருந்தார். மூன்று நாளாகியும் பசியை மறந்து, வீட்டை மறந்து தங்களுடைய பொழுதுபோக்கெல்லாம் வெறுத்து, வேலையை மறந்து பசிதாகத்தோடு தன் பாதத்தில் அமர்ந்து வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்த தம்முடைய மக்களைச் சரீரப்பசியோடு அனுப்ப மனமில்லாமல், தன்னுடைய சீஷரை அழைத்து, ஜனங்களுக்காக பரிதபிக்கிறேன், ஏதாவது செய்யலாம் என்று நினைக்கிறேன்.



இவர்கள் இப்பொழுது என்னிடத்தில் தங்கியிருந்து மூன்றுநாளாய் சாப்பிட ஒன்று மில்லாதிருக்கிறார்கள். இவர்களில் சிலர் தூரத்திலிருந்து வந்தவர்களாகையால் நான் இவர்களைப் பட்டினியாய் வீட்டிற்கு அனுப்பி விட்டால் வழியில் சோர்ந்து போவார்கள் என்றார். அதற்கு சீஷர்கள் 200 பணத்துக்கு வாங்கிட்டு வந்து கொஞ்சம் கொஞ்சமாய் கொடுத்தாலும் கூட பத்தாதே என்று தங்களுடைய மனதிலே நினைக்கிறதை ஒளிவு மறைவு இல்லாமல் ஆண்டவரிடம் சொன்னார்கள். உடனே உங்களிடம் எத்தனை அப்பங்கள் உண்டு என்று கேட்டார். ஏழு அப்பங்களையும், சிலசிறு மீன்களையும் கொண்டு போய் கொடுத்தார்கள். எல்லோரையும் வரிசை வரிசையாய் பந்தியிருக்க கட்டளையிட்டு, ஏழு அப்பங்களை எடுத்து பிதாவைப் பார்த்து ஸ்தோத்திரம் பண்ணி, ஆசீர்வதித்து பிட்டு சீஷர்களிடத்தில் கொடுத்தார். அவர்கள் பரிமாறினார்கள். எல்லாரும் திருப்தியாய் சாப்பிட்டார்கள். எவ்வளவு பேர் தெரியுமா? நாலாயிரம் பேர் பெண்கள், பெரியவர், சிறியவர் என குறைந்தது 12 ஆயிரம் பேராவது சாப்பிட்டிருக்க வேண்டும். மீதியான உணவை ஏழு கூடை நிறைய எடுத்தார்கள் (மாற் 8:1-9) இதுபோல இன்னொரு முறை ஐந்து அப்பம், இரண்டு மீனை ஆசீர்வதித்தபொழுது 5000 ஆண்களும், பெண்கள், சிறியவர், பெரியவர் என்று ஏறக்குறைய 20,000 பேர் சாப்பிட்டார்கள்.மீதியானதை 12 கூடை நிறைய எடுத்தார்கள். இந்த அற்புதத்தைக் கண்ட எல்லோரும் மெய்யாகவே இவர் உலகத்தில் வருகிறவரான தீர்க்கதரிசி என்றார்கள். மட்டுமல்ல அவரே வானத்திலிருந்திறங்கின ஜீவஅப்பம், நல்லவர் என்பதை ருசிபார்த்தார்கள்.

## அவர் செய்தது வாய்த்தது எப்படி?

இயேசு 40 நாட்கள் உபவாசமாயிருந்த போது பசியுண்டாயிற்று அப்பொழுது சாத்தான் நீ தேவகுமாரனாக இருந்தால் இந்த கல்லுகளை அப்பங்களாக்கும் என்று சோதித்தான். தேவனாக இருந்த இயேசு, இந்த பூமியில் மனிதனாகப் பிறந்தவுடன், அவருடைய தெய்வத்தின் தன்மை, வல்லமை மாறவும் இல்லை, குறையவுமில்லை. அவர் பூமியில் வாழ்ந்த போது, அவர் 100/100 தேவனாகவும், மனிதனாகவும் வாழ்ந்தார். தான் சாப்பிடுவதற்காக, தனக்காக அவர் இங்கு வரவில்லை. மக்களின் பசியை ஆற்றி, அவர்களின் பாவ, சாபங்களை தான் சுமந்து தீர்ப்பதின் மூலம் அவர்கள் விடுவிக்கப்பட்டு, சந்தோஷப்படுவதின் மூலம் பிதா மகிமையடைய வேண்டும் என்பதற்குத் தான் வந்தார். தேவைப்படும் போது, தேவையுள்ள, அவசர காலத்தில், நெருக்கடி நேரத்தில் என் பாதம் அமர்ந்து, என்னோடே தங்கியிருக்கும் என் ஜனங்களின் பசி, என் பசியை விட பெரிது, அப்போது கல்லுக்கும் உயிர் கொடுப்பேன், கல்லையும் அப்பமாக்குவேன். கொஞ்சத்தையும் பலுகிப்பெருகச் செய்வேன். ஒன்றுமில்லாவிட்டால் கூட உருவாக்கி கொடுப்பேன். மனுஷன் அப்பத்தினால் மாத்திரமல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு



சிருஷ்டிக்கப்பட்டது கொலே 1 16. அவர் ஒரு வார்த்தைச் சொன்னாலே வானத்திலிருந்து மன்னா பொழிந்தது போல அப்பங்களைக் கொடுக்க முடியும். ஆனால் உங்களிடத்தில் எத்தனை அப்பங்கள் உண்டு என்று கேட்டார். உடனே அப்பங்களை கொண்டு போய் கொடுத்தார்கள். சீடர்கள் இந்த ஏழு அப்பத்தை வைத்து எல்லோருக்கும் எப்படிக் கொடுக்க முடியும்? என்று மீண்டும் கேள்வி கேட்டுக் கொண்டிராமல் எல்லோரையும் அவர் சொன்னபடியே பந்தியிருக்கச் செய்தனர். அவர் அப்பத்தைப் பிட்டுக் கொடுத்தவுடன் பரிமாறினர். அவர்கள், அவர் சொன்னபடியே செய்த போது நாலாயிரத்திற்கும் அதிகமான பேர் திருப்தியாய், வேண்டிய மட்டும் சாப்பிட்டனர். இயேசுவின் பலுகிப் பெருகச் செய்யும் வல்லமை அப்பங்களைக் கொடுத்துக் கொண்டே இருந்தது. திருப்தியான பின்பு 7 கூடை நிறைய மீதம் எடுத்தார்கள். ஒன்று கூட சேதமாய்ப் போகாதபடிக்கு மீதியானவைகளைச் சேர்த்து வையுங்கள் என்ற வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து அப்படியே செய்தார்கள். திருப்தியான பின்பு, திரும்பிப் போய்விடாமல் ஆண்டவரோடே சீஷராய் நிலைத்திருந்தார்கள்.இயேசு சிருஷ்டிகர் தானே, கடவுள் வானத்திலிருந்து பொத்துனு விழவைக்கட்டும் என்று சீஷர்கள் கையைக் கட்டிக் கொண்டிருக்கவில்லை. இயேசுவினுடைய மனதுருக்கத்தைப் புரிந்து கொண்டு, அவர் சொல்லச் சொல்ல செய்தது போல நீங்களும், ஆண்டவருடைய வார்த்தையின்படி செய்யுங்கள். சோம்பலாயிராமல் யோசித்துக் கொண்டேயிராமல், அவருடைய வார்த்தையைப் பிடித்துக் கொண்டு, அவருடைய ஞானம், பெலத்தைப் பெற்றுக் கொண்டு, நீங்கள் செய்வதை தொடர்ந்து செய்யுங்கள். அதை அவர் வாய்க்கப் பண்ணுவார். அவருடைய வார்த்தை, வல்லமை நீங்கள் செய்வதை வாய்க்கப்பண்ணி, மிகுதியாய்ப் பெற்றுக் கொள்ளவும் மீதமெடுக்கவும் உதவி செய்வார். நீங்கள் இப்பொழுது இருக்கிறதைப் பார்க்கிலும் ஆயிரமடங்கு அதிகமாகும்படி உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதித்து, நீங்கள் செய்வதை வாய்க்கப்பண்ணுவாராக!.

வார்த்தையினாலும் பிழைப்பான் என்று சொல்லி சோதனைக்காரனை மேற்கொண்டார். இயேசு அப்பத்தை எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி பிட்டதைப்போல நீங்களும், உங்களுக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பிற்காக, கடமைக்காக, படிப்பு, வேலை, உங்களுக்கிருக்கும் கொஞ்ச ஞானம், பெலனுக்காக, ஒத்தையாயிருக்கிறேன், ஒன்றுமேயில்லை என்பதை ஒளிவுமறை வில்லாமல் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள், இருப்பதற்காக நன்றி சொல்லுங்கள். எந்த வேலையையும், படிப்பையும் ஆரம்பிக்கும் போது தேவனுக்கு நன்றி சொல்லி ஆரம்பியுங்கள். குறுக்கு வழியில் தவறான காரியங்களைச் செய்து, தற்புகழ்ச்சியில் விழுந்து, மனுஷரைப் பிரியப்படுத்த எதையும் செய்யாதீர்கள். குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக நீங்கள் எதைக் கேட்டாலும், எதைச் செய்தாலும் அது உங்களுக்கு வாய்க்கும். அவர் கையினால் உங்களுக்கு வாய்க்கும். ஏசாயா 53:10.உங்களுக்கு எதிரான ஆயுதங்கள் வாய்க்காதே போகும் ஏசாயா 54:17.

## என்ன சொல்லுகிறாரோ, அதன்படி செய்யுங்கள்

இயேசு இல்லாதவைகளை இருப்பது போல் அழைக்கும் தேவன். ஒன்றுமில்லாவிட்டாலும் உருவாக்குகிறவர். அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது. பரலோகத்திலும் பூமியிலுள்ள காண்கிற, காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், அதிகாரங்களானாலும் சகலமும், அவரைக் கொண்டும், அவருக்கென்றும்

# ஜெபிக்கும் உனக்கு பதிலுண்டு

## ஹலோ குட்டீஸ் நல்லாயிருக்கீங்களா?

யாழினியும், ரத்னாவும் **Friends**, யாழினி யாருடனும் அதிகம் பேசமாட்டாள், ரத்னாவோ பேசிக் கொண்டேயிருப்பாள். ஒருநாள் பள்ளியில் எப்பவும் கலகலப்பாக பேசும் ரத்னா, சோகமாக உட்கார்ந்திருப்பதைப் பார்த்த யாழினி, ஏன் ரத்னா சோகமாக உட்கார்ந்திருக்க, என்ன ஆச்சு முடியலையா? எனக் கேட்டாள். ரத்னாவோ உடம்புக்கெல்லாம் ஒன்னும் இல்லப்பா, எங்க வீட்டுல அம்மாவுக்கும், அப்பாவுக்கும் ஒரே சண்டை. அம்மா சண்டையில பிள்ளையும் வேண்டாம் ஒன்னும் வேண்டாம்னு ஊருக்குப் போயிட்டாங்கன்னு சொல்லி அழுதாள். அவளுடைய அழுகையை நிறுத்த முடியவில்லை. யாழினி சொன்னாள் வா, நம்ம இரண்டுபேரும் இயேசப்பாகிட்ட ஜெபம் பண்ணுவோம், நிச்சயம் அம்மா வந்திருவாங்க அழாதப்பான்னு அவள், கையைப் பிடித்து ஜெபம் பண்ணினாள். என்ன ஆச்சரியம் தெரியுமா? அவுங்க அம்மா இரண்டே நாளில வீட்டுக்கு வந்துட்டாங்கன்னு ரத்னா, சந்தோஷமா வந்து யாழினியிடம் சொன்னாள். இரண்டு பேரும் சேர்ந்து இயேசப்பாவுக்கு நன்றி சொன்னாங்க. ஆம் நிஜமாவே நீங்க கூட உங்க அம்மா, அப்பாவுக்காக, Friends-க்காக, தேசத்திற்காக ஜெபம் பண்ணினா உங்க ஜெபத்திற்கும் இயேசப்பா பதில் தருவாங்க. யாழினி மாதிரி உங்க Friends கிட்டேயும், ஏன் சோகமா, சோர்வா இருக்கிறன்னு விசாரிச்சு ஜெபம் பண்ணுவீங்களா?



பாபிலோன் என்னும் நாட்டு ராஜா, தனக்கு வந்த கனவையே மறந்திட்டாரு. ஆனா அந்த கனவினால ரெம்பவோ கலங்கிப் போயிருந்தாரு, அதனால அங்கேயிருக்கிற எல்லா ஞானிகளையும் அழைத்து என் கனவையும் சொல்லி, அதற்கான விளக்கத்தையும் சொல்லுங்கன்னு சொன்னாரு. அந்த நாட்டு ஞானிகள் கனவைச் சொல்லுங்கள் ராஜா, நாங்கள் விளக்கம் சொல்லுகிறோம் என்றார்கள். ராஜாவோ கனவையும், விளக்கத்தையும் சொன்னால் பரிசுகளைத் தருவேன். இல்லைன்னா, எல்லாரையும் கட்டி கொன்றுபோட தன்னுடைய அதிகாரிக்கு கட்டளை போட்டுட்டார். அந்த நேரத்தில் தான் ஆண்டவருடைய பிள்ளைகளாகிய தானியேலும், அவருடைய நண்பர்களும் கைகோர்த்து, ஆண்டவரே, இந்த ராஜா எங்களை அழிக்காதபடி எங்களைக் காத்துக் கொள்ளும் என்று ஜெபம் பண்ணினாங்க, ஆண்டவர் அவர்கள் ஜெபத்தைக் கேட்டு, அவர்களின் உயிரைக் காப்பாற்றினார். என்ன குட்டீஸ் நீங்களும் உங்க ஊழ்ண்ங்ய்க்ள்-ஸோடு சேர்ந்து ஜெபிக்கப் போறீங்க தானே.... யாங்ழ்ஹ ஞ்ர்ர்க் ர்ந் க்ஷஹ்றங்

## ஜெபம்

அன்புள்ள இயேசப்பா, நானும் இனிமே என் ஊழ்ண்ங்ய்க்ள்-ஸோட கஷ்டங்கள் தீருவதற்காகவும், அவர்களோடு சேர்ந்து எங்க தேசத்திற்காகவும் ஜெபிக்கப் போறேன். எங்க ஜெபத்தைக் கேளுங்க. இயேசப்பா, எங்க நாட்டுத் தலைவர்களை, மக்களை காத்துக் கொள்ளுங்க. இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

## மனப்பாட வசனம்

உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக் கொள்ளப் போகிற எந்தக் காரிய-த்தைக் குறித்தாகிலும், பூமியில் ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும். மத் 18:19.



இயேசு வாழ்கிறார் மீடியா துறைக்கு

# வேலைக்கு ஆட்கள்

# தேவை

இடம்
மதுரை
சென்னை
திண்டுக்கல்

## Available Positions :

#On Site

**MANAGER - MEDIA OPERATIONS**

Should take care of the entire media operations with vast knowledge in media and digital media with latest technology implementation. Should be Expert in Team handling and the projects.

#Hybrid

**GRAPHIC DESIGNER**

Should have vast knowedgle in Corel Draw,Adobe in design and illustrator. Should have the idea of print media and good work skill on digital platform desgin work as per the platforms

#Hybrid

**CONTENT WRITER**

Should have a biblical knoweldge to write the content both in print media as well as in the Digital Platfoms. Excellent wrtining and communicating skill needed.

## Available Positions :

#On Site

**PROGRAM PRODUCER / DIRECTOR**

Planning and creating new program as per the Inputs and need to have a vast knowledge in creating content from production to broadcasting . Knoweldge in Target Audience is a must.

#Hybrid

**VIDEO EDITOR**

Should have vast knowedgle in Premire Pro, Davinci Resolve and FCP X. With creative Edit Skill using the lastest Desinging skill as per the broadcast Standard

#On Site

**SOUND ENGINEEER**

Should have a work experience in Live sound Reinforcment and should handle the Aduio Studio in addtion the Live Broadcasting in realtime.

## Available Positions :

#Hybrid

**MOTION GRAPHICS DESIGNER**

Should have vast knowedgle in After effects, Premiere pro and photoshop with good creative skill. Using the realtime graphics and virtual studio idea will be a plus.

#On Site

**CAMERAMAN**

Should Operate the camera with lighting and audio knowledge.Ready to learn and implement the latest technology

#On Site

**PHOTOGRAPHER**

Able to handle the DSLR and to work on the lightroom. Good Knowdelge with Creative Skill. Four Wheel Driving Experi-ence Needed.

Christian Candidates Having a Zeal to Work in a Christian Organisation can APPLY

**இப்பொழுது விண்ணப்பியுங்கள்**

https://jesuslives.in/careers/

OR

Email : connect@dprince.in

OR

Whatsapp : +91 7825 04 7825

OR

Whatsapp : +91 9498 00 0449

- * Any UG/PG Candidates with respective Skill
- * Bsc Visual Commuication or Any Media Studies or Experience in the respective Field.
- * Experienced Staffs will be given Good Remuneration.
- * Food And Accomodation will be provided.
- * Male & Female can Apply.
- * Fresher are welcomed whereas will undergo 3 months training without stipend.

# தேவனாலே எல்லாம் கூடும்



சகோதரி. [illegible]

[illegible]

சகோதரி. [illegible]

[illegible]

சகோதரி. [illegible]

[illegible]

# இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு இணைந்து சுவிசேஷ ஒளியை பரவ செய்யுங்கள்

தேவன், தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது ஊழியத்தில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புகிறார்.அவரது நோக்கத்தை நிறைவேற்ற அவர் தமது பிள்ளைகளை பயன்படுத்துகிறார். நாம் வெறும் பார்வையாளராயிருப்பதை அவர் விரும்பாமல், அவரது ஊழியத்தின் பங்காளராக மாறுவதையே அவர் விரும்புகிறார்! நாம் கரையில் நிற்பதை விரும்பாமல் களத்தில் இறங்குவதையே அவர் விரும்புகிறார். அறிவிக்கப்படாத மக்களைச் சந்தித்து, சுவிசேஷத்தை கூறி, உலகை சுவிசேஷமயமாக்குகிற அந்த மகிமையான ஊழியத்தில் தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் என அவர் விரும்புகிறார்!

விளையச் செய்கிறவர் தேவனாக இருந்தாலும், விதைக்கிற வேலையையும், நீர்ப்பாய்ச்சுகிற வேலையையும் அவர் நமது கரங்களில் ஒப்படைத்திருக்கிறார்(1கொரிந்தியர்3:7). இக்கடைசி காலத்தில், தமது சித்தத்தை நிறைவேற்றுகிற பணியில் ஈடுபடவேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

வாருங்கள்! இக்கடைசி கால எழுப்புதல் சுவிசேஷ பணியில் இணைந்து அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தின் பங்காளர்களாக மாறுவோமாக!

## 1) BANK TRANSFER

| | |
|---|---|
| A/C NAME | : JESUS LIVES TRUST |
| BRANCH | : KOCHADAI MADURAI |
| BANK NAME | : UNION BANK OF INDIA |
| A/C.NO | : 493902010001022 |
| IFSC CODE | : UBIN0549398 |

| | |
|---|---|
| A/C NAME | : L.VINCENT RAJ |
| BRANCH | : MADURAI |
| BANK NAME | : AXIS BANK |
| A/C.NO | : 109010100247030 |
| IFSC CODE | : UTIB0001765 |

**2) இணையதளம்(WEBSITE)**

WWW.JESUSLIVES.IN

**3) காசோலை(CHEQUE)**

JESUS LIVES TRUST OR L.VINCENT RAJ

**4) GOOGLE PAY** : GPAY(GOOGLE PAY)TO , 944 300 9333 ,7598359316

**5) மணியார்டர்(E.M.O) :** இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் 54 ஏ.ஐ.பி.இ.ஏ நகர், ஏ – காலனி பரவை ,மதுரை – 625 402

நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கென்று வங்கிக் கணக்கு மூலமாகவோ, இணையதளம் மூலமாகவோ, அல்லது GOOGLE PAY மூலமாகவோ அனுப்பலாம். காணிக்கை அனுப்பியபின் அதைக் குறித்த விபரத்தை 944 28 00 449 என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு WHATSAPP மூலமாகவோ, accounts@jesuslives.in மூலமாகவோ எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

நடப்பு செய்திகள்

# குழந்தைகளை டெங்குவிலிருந்து பாதுகாப்பது எப்படி..?

இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் தற்போது டெங்கு காய்ச்சல் அதிக அளவில் பரவி வருகிறது. சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் டெங்கு காய்ச்சல் தொற்றுக்கு ஆளாகி வருகின்றனர். நோய் எதிர்ப்பு சக்தி இருக்கக்கூடிய பெரியவர்களையே எளிதில் தாக்கக்கூடிய இந்த டெங்கு காய்ச்சலிலிருந்து குறைவான நோய் எதிர்ப்பு சக்தி கொண்ட புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கு டெங்கு காய்ச்சல் ஏற்படுவதைத் தடுக்க கூடுதல் கவனமாக இருப்பது அவசியம். குழந்தைகளுக்கு தொடர்ச்சியான பராமரிப்பு அளிப்பதன் மூலமாக மட்டுமே இந்த மோசமான வைரஸிடம் இருந்து அவர்களை நம்மால் காப்பாற்ற முடியும். டெங்கு வைரஸ் பொதுவாக மழைக்காலத்தில் அதிக அளவில் பரவக்கூடியது. இதுவரை டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்படாத தாய்க்கு பிறந்த குழந்தைகளுக்கு டெங்கு காய்ச்சல் ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகமாக இருக்கிறது. ஏடிஸ் கொசு மூலமாகவே டெங்கு காய்ச்சல் பரவுகிறது. டெங்கு காய்ச்சலின் ஆரம்பகால அறிகுறிகளை கண்டுபிடிப்பது கடினமான ஒரு விஷயம். ஏனெனில் டெங்கு காய்ச்சல் ஆரம்பத்தில் வழக்கமான காய்ச்சல் போல தோன்றக்கூடிய தன்மை கொண்டது. டெங்கு காய்ச்சலுக்கான அறிகுறிகளை குழந்தைகளில் ஆரம்பகாலத்தில் கண்டுபிடித்து விடுவது விரைவான சிகிச்சை அளித்து தேவையற்ற சிக்கல்களை தடுப்பதற்கு உதவும்

**குழந்தைகளில் டெங்கு காய்ச்சலுக்காக அறிகுறிகள்:-**

• காய்ச்சல் • வாந்தி • தூக்க கலக்கம் • ஈறுகளில் ரத்தக்கசிவு (ஈறுகள் அல்லது மூக்கு) • தோலில் தடிப்புகள் • ஆற்றல் குறைவு

**குழந்தைகளை கொசுக்கடியில் இருந்து பாதுகாப்பது எப்படி?**

பெரியவர்களை காட்டிலும் சிறுவர்கள் குறிப்பாக குழந்தைகளுக்கு டெங்கு காய்ச்சல் மற்றும் அது சம்பந்தமான பிரச்சனைகள் ஏற்படுவதற்கான அபாயம் அதிகமாக உள்ளது. எனவே அவர்களை கொசுக்கடியில் இருந்து பாதுகாப்பாக வைப்பதற்கான ஒரு சில முயற்சிகளை நாம் எடுக்க வேண்டும். அவை என்னன்ன என்பதை இப்பொழுது தெரிந்து கொள்ளலாம்

கொசு உள்ளே செல்ல முடியாத அளவுக்கு சரியான முறையில் அமைக்கப்பட்ட கொசு வலை அல்லது ஸ்கிரீன் போன்றவற்றை குழந்தை இருக்கக்கூடிய இடத்தில் ஒரு பாதுகாப்பான தடுப்பாக நீங்கள் வைக்கலாம்.

குழந்தைகளுக்கு கை கால்களை முழுவதுமாக மறைக்கக் கூடிய ஆடைகளை அணிவிக்கவும். முடிந்த அளவு அவர்களது தோல் வெளிப்படாதவாறு ஆடைகளை பயன்படுத்தவும்.

மருத்துவர்களின் பரிந்துரையின் அடிப்படையில் குழந்தைகளுக்கு ஏற்ற மஸ்கிட்டோ ரிப்பல்லன்ட்டைப் பயன்படுத்தலாம்

விடியற்காலை மற்றும் பொழுது சாய்ந்த பிறகு குழந்தைகளை வெளியே அழைத்துச் செல்வதை முடிந்த அளவு தவிர்த்து விடுங்கள். ஏனெனில் இந்த சமயத்தில் கொசுக்கள் ஆக்டிவாக இருக்கும். வீட்டையும், சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைக்கவும். தேங்கி கிடக்கக்கூடிய தண்ணீர் மற்றும் மூடாமல் வைத்திருக்கக்கூடிய தண்ணீர் போன்றவற்றை அகற்றவும்.

கொசுக்கள் முட்டையிட்டு பெருகுவதற்கு காரணமாக இருக்கக்கூடிய விஷயங்களை அகற்ற அக்கம் பக்கத்தினரையும் ஊக்குவிக்கவும்.

பெரும்பாலும் குழந்தைகளில் டெங்கு காய்ச்சலுக்கான அறிகுறி லேசானது முதல் மிதமானது வரை இருக்கலாம். எனினும் தாமதமாக காய்ச்சலை கண்டுபிடிப்பது தொற்றை தீவிரமாகி நிலைமையை இன்னும் மோசமாகலாம்.



செம்பட்டியில்
புத்தாண்டு வாக்குத்தத்த
ஆசீர்வாதக் கூட்டம்
2024
ஜனவரி
01
மதியம் 3 மணி
முதல் மாலை 6 வரை
இடம்
வானத்தின் வாசல் எழுப்புதல் ஜெப மையம்
செம்பட்டி, திண்டுக்கல்.



“என் பிள்ளைகள் ஒலிவமர கன்றுகள்”
“என் பிள்ளைகள்”
ஆசீர்வாத ஜெப திட்டம்
• உங்கள் பிள்ளைகளின் ஆசீர்வாதத்திற்காக, தேவ பாதுகாப்பிற்காக, படிப்பிற்காக, சுகத்திற்காக அனுதின பிரார்த்தனை ஏறெடுக்கப்படும்
• உங்கள் குழந்தைகளின் எதிர்காலத்தை குறித்த கவலைகள் மற்றும் பயம் நீங்க.
• அவர்களை குறித்த தேவ திட்டம் நிறைவேற.
• வயது வரம்பு 24 வரை
இத்திட்டத்தில் இணைந்திட அழையுங்கள்
94428 00449, 94428 00447
WHATSAPP மூலம் இணைய 94980 00449
இன்றே இணைந்திடுங்கள்.
உங்கள் பிள்ளைகளின் வருங்காலத்திற்காக
அனுதினமும் பிரார்த்தனை ஏறெடுக்கப்படும்.

# நம்பிக்கையின் இரவு
# NIGHT OF HOPE

## புதிய மாத ஆசீர்வாத வாக்குத்தத்த ஜெபம்

**அக்டோபர் 31**

இரவு 10.30 மணி
முதல் 12.30
மணி வரை

**நவம்பர் 30**

இரவு 10.30 மணி
முதல் 12.30
மணி வரை



*Evg. Kala Vincentraj*



*Evg. L. Vincentraj*

**உங்கள் ஜெப விண்ணப்பங்களை அனுப்புங்கள்.**
**உங்களுக்காக ஜெபம் ஏறெடுக்கப்படும்**

அனுப்ப வேண்டிய எண்

**944 28 00 449**

நமது இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்
அனைத்து சமூக ஊடகங்கள் மற்றும்
இணையதளத்திலும் ஒளிபரப்பாகிறது